# <u>உசிலம்பட்டி நகராட்சி  மன்றம்</u>
## <u>நகர்மன்ற சாதாரணக்கூட்டம்</u>
## <u>நாள். 14.10.2022 வெள்ளிக்கிழமைநேரம் - காலை 11.00 மணி</u>

---

**<u>மன்றப்பொருள்: 1</u>**

உசிலம்பட்டி நகராட்சி வார்டு-12 பேருந்து நிலையம் எதிரே அமைந்துள்ள தேவர் திருவுருவ சிலைக்கு வருகின்ற 30.10.2022 அன்று நடைபெறவுள்ள தேவர் ஜெயந்திக்கு அங்கு உள்ள தேவர் சிலை, சுற்றுச்சுவர்களுக்கு வர்ணம் பூசுதல் மற்றும் மின்விளக்கு, அலங்கார விளக்குகள் அமைத்தல் பணி ஆண்டுதோறும் நகராட்சி மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட பணிக்காக தயார் செய்ய ரூ. 2.00 இலட்சம் ( ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும் ) மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

1). மன்றம் அனுமதி வழங்கலாம்.

2). முன் அனுமதி பெற்று பொது நிதியிலிருந்து பணி மேற்கொண்டதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1936/2022/இ1)

**தீர்மானம் எண்.132**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>மன்றப்பொருள்: 2</u>**

உசிலம்பட்டி நகராட்சியில் நமக்கு நாமே திட்டம் 2022-23-இன்கீழ் வார்டு எண்.12 கருக்கட்டான்பட்டி ரோடு சந்திப்பு, வார்டு-12 தேனி ரோடு (நகராட்சி அலுவலக தெரு) வார்டு-12 பேருந்து நுழைவு வாயில் பகுதி வார்டு-19 நீதிமன்ற வளாக சாலை பகுதியில் வார்டு-20 பேரையூர் ரோடு, பி.எம்.டி. நகர் எதிர்புறம் வார்டு-11 கண்ணன் தியேட்டர் அருகில் ஆகிய ஆறு பகுதிகளில் சிறுமின் கோபுர விளக்குகள் அமைத்தல் பணியினை ரூ. 25.20/- இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி மற்றும் நிதி கோரும் பிரேரணை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கு

**<u>அலுவலகக்குறிப்பு :</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1854/2022/இ1)

**தீர்மானம் எண்.133**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>மன்றப்பொருள்: 3</u>**

உசிலம்பட்டி நகராட்சி 1 முதல் 24 வரை உள்ள அனைத்து வார்டுகளின் தெருக்களுக்கு செல்லும் வீட்டு குடிநீர் இணைப்புகளுக்கான பகிர்மான குழாய் அடிக்கடி பழுதடைந்து பொதுமக்களுக்கு சீரான குடிநீர் வழங்குவதில் சிரமம் ஏற்படுவதால் பொதுமக்களின் நலன் கருதி தடையில்லா குடிநீர் விநியோக செய்திட அடிக்கடி ஏற்படும் பகிர்மான குழாய் பழுது நீக்கத்தினை ரூ. 3.00/- இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதியில் பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u> :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 2102/2022/இ1)

**தீர்மானம் எண்.134**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>மன்றப்பொருள்: 4</u>**

உசிலம்பட்டி நகராட்சிக்குச் சொந்தமான எஸ்.மேட்டுப்பட்டி தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து 100 எச்.பி. மோட்டார் மூலம் குடிநீர் பம்பிங் செய்யப்பட்டு 24 வார்டுகளுக்கும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி பம்பிங் மெயின் அமைக்கப்பட்டுள்ள டி.ஐ. மற்றும் ஏசி பைப்புகள் அவ்வப்போது பழுது ஏற்பட்டு குடிநீர் வழங்குவதில் பாதிப்பு ஏற்படுவதால் மேற்படி அடிக்கடி ஏற்படும் பழுது நீக்க பணிகளுக்கு 12.07.2022-இல் ஒப்பந்தப்புள்ளி கோரி ரூ. 5.00 இலட்சத்தில் பணி மேற்கொள்ளப்பட்டதில் பணிக்கான மதிப்பீடு தொகை பழுது நீக்கம் பணிக்கு பயன்படுத்தப்பட்டதால் மறுபடியும் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யவும், அடிக்கடி ஏற்படும் பழுது நீக்கங்களை சரிசெய்யவும் அதற்காக தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 5.00 இலட்சத்தில் பணிகளை பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 2109/2022/இ1)

**தீர்மானம் எண்.135**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>மன்றப்பொருள் : 5</u>**

உசிலம்பட்டி நகராட்சி வார்டு எண்.12 பகுதியில் அமைந்துள்ள நகராட்சி பேருந்து நிலையத்தில் உள்ள தரைத்தளத்தில் மேடுபள்ளம் ஏற்பட்டு மிகவும் சேதமடைந்த நிலையில் உள்ளதால், பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகளின் நலன் கருதி பேருந்து ஓடுதளத்தில் தார்சாலை அமைத்தல் பணியினை ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 2110/2022/இ1)

**தீர்மானம் எண்.136**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>மன்றப்பொருள்: 6</u>**

உசிலம்பட்டி நகராட்சி வார்டு எண்.1, நாஞ்சில்நகர், வார்டு எண்.21 சந்தனமாரியம்மன் கோவில் தெரு மற்றும் வில்லாணிச்சாலை ஆகிய இடங்களில் குடிநீர் பகிர்மான குழாய் இல்லாததால் பொதுமக்களுக்கு சிரமம் ஏற்படுகிறது. எனவே, மேற்கண்ட இடங்களில் பொதுமக்கள் நலன் கருதி பகிர்மான குழாய் அமைத்தல் பணியினை ரூ. 1.40 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 2108/2022/இ1)

**தீர்மானம் எண்.137**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>மன்றப்பொருள்: 7</u>**

உசிலம்பட்டி நகராட்சி வார்டு எண்.4, கரும்பு ஆலை தெரு, வார்டு-19 ஆர்.கே. தேவர் தெரு, வார்டு-3 அன்னம்பாரிபட்டி மற்றும் வார்டு-24 கவண்டன்பட்டி ஆகிய இடங்களில் உள்ள சிறுபாலங்கள் மொத்தம் 4 எண்ணம் சேதமடைந்து பொதுமக்களுக்கு மிகுந்த சிரமத்தை ஏற்படுத்துவதால் மேற்படி இடங்கள் சிறுபாலங்கள் ரூ. 1.82 இலட்சம் மதிப்பீட்டில் சிறுபாலங்களை அமைத்தல் பணியினை பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 2107/2022/இ1)

**தீர்மானம் எண்.138**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>மன்றப்பொருள்: 8</u>**

உசிலம்பட்டி நகராட்சி உள்ள 24 வார்டுகளிலும் மொத்தமுள்ள 1460 தெருமின் விளக்குகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரிசெய்ய மின் உதரி பாகங்கள் ஒரு ஆண்டுக்கு தேவையான அளவு கொள்முதல் செய்ய தயார் செய்த மதிப்பீடு 5,00,000/-இல் பொது நிதியில் பணிகள் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 2111/2022/இ1)

**தீர்மானம் எண்.139**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>மன்றப்பொருள்: 9</u>**

உசிலம்பட்டி நகராட்சி 1 முதல் 24 வரை உள்ள வார்டுகளில் நகராட்சிக்குச் சொந்தமான 125 எண்ணம் சிறுமின் விசை பம்பு மற்றும் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட 125 எண்ணம் சிறுமின் விசை பம்புகளில் அவ்வப்போது ஏற்படும் மோட்டார் பழுது சரி செய்து பொது மக்களுக்கு தடையில்லாமல் தண்ணீர் வழங்கும் பொருட்டு தயார் செய்யப்பட்ட உத்தேச

மதிப்பீடு ரூ. 5.00 இலட்சத்தில் தண்ணீர் பணி அவசர அவசியம் கருதி பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 2106/2022/இ1)

**தீர்மானம் எண்.140**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**மன்றப்பொருள்: 10**

உசிலம்பட்டி நகராட்சி பேருந்து நிலைய வளாகத்தில் அமைந்துள்ள அம்மா உணவகத்தில் பழுதடைந்துள்ள மின் விளக்கு, மின் விசிறி (False Ceiling) கதவு டைல்ஸ் மற்றும் முன் பகுதியில் உள்ள ஸ்டிக்கர் மாற்றியமைத்தல் போன்ற பராமரத்து பணிகள் ரூ. 80,000/- (ரூபாய் எண்பதாயிரம் மட்டும்) மதிப்பீட்டில் பொது நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 2105/2022/இ1)

**தீர்மானம் எண்.141**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**மன்றப்பொருள்: 11**

உசிலம்பட்டி நகராட்சி அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள நகர்மன்ற கூட்ட அரங்கில் நகர்மன்ற தலைவர் மற்றும் நகர் மன்ற உறுப்பினர் கூட்டம் நடத்துவ்தற்கு ஏதுவாக வர்ணம் பூசுதல், பிளே வுட் பிளாட் பார்ம் பழுது பார்த்தல் ஸ்டிக்கர்ஸ் ஒட்டுதல் போன்ற மராமத்து பணிகளை ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டில் பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 2104/2022/இ1)

**தீர்மானம் எண்.142**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>மன்றப்பொருள்: 12</u>**

2022-23ஆம் ஆண்டிற்கான பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளப்படும் வார்டு 12 பேருந்து நிலையம் அருகில் உள்ள தேவர் சிலை சுற்றுச்சுவர் வர்ணம் பூசுதல் மற்றும் மின் விளக்கு அலங்கார விளக்குகள் அமைத்தல் பணி மேற்கொள்ளுதல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எ. | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்புநோக்கு பட்டியலின்படி |
|---|---|---|---|---|
| 1 | வார்டு-12 பேருந்து நிலையம் அருகில் உள்ள தேவர் சிலை சுற்றுச்சுவர் வர்ணம் பூசுதல் மற்றும் மின்விளக்கு அலங்கார விளக்குகள் அமைத்தல் பணி மேற்கெள்ளுதல் | 1.67 | திரு. ரவிக்குமார் காண்ட்ராக்டர், உசிலம்பட்டி | 0.10% குறைவு |
| | | | திருமதி. பி. கார்த்திகா, உசிலம்பட்டி | 2.83% அதிகம் |

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. ரவிக்குமார் காண்ட்ராக்டர் உசிலம்பட்டி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1936/2022/இ1)

**தீர்மானம் எண்.143**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>மன்றப்பொருள் : 13</u>**

2021-22 ஆம் ஆண்டிற்கான 15-வது மத்திய நிதிக்குழு பரிந்துரையின் பேரிலான பினையில்லா மான்யத்திட்டம் (Untied Grant) நிதியின்கீழ் மேற்கொள்ளப்படும் வார்டு-22

பாரதியார் நகரில் மழைநீர் வடிகால் வாய்க்கால் அமைத்தல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எ. | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்புநோக்கு பட்டியலின்படி |
|---|---|---|---|---|
| 1 | வார்டு-22 பாரதியார் நகரில் மழைநீர் வடிகால் வாய்க்கால் அமைத்தல் பணி | 8.00 | திருமதி. எம்.விஜயலட்சுமி உசிலம்பட்டி | 0,12% குறைவு |
| | | | திரு. கே.எம்.ராஜேஸ்கண்ணா உசிலம்பட்டி | 0.50% அதிகம் |

மேற்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருமதி. எம்.விஜயலட்சுமி ஒப்பந்ததாரர் உசிலம்பட்டி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) நகர்மன்ற முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 2719/2022/இ1)

**தீர்மானம் எண்.144**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**மன்றப்பொருள்: 14**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 2178/2021/இஏ-2, நாள். 02.10.2021-இல் வெளிக்கொணர்வு முகமை மூலம் போதுமான பணியாட்களை ஒப்பந்த அடிப்படையில் அமர்த்துவது தொடர்பாக மதிப்பீடு தயார் செய்து 19.11.2021-இல் பிரேரணை நகராட்சி நிர்வாக இயக்குநர், அலுவலகம் சென்னைக்கு அனுப்பப்பட்டு இதுநாள் வரை போதிய பணியாளர்கள் வெளிக்கொணர்வு முகமை மூலம் நிரப்பிட காலதாமதம் ஆகும் காரணத்தினாலும் மேலும் ஏற்கனவே வழங்கப்பட்ட ஒப்பந்தம் 30.09.2022 உடன் முடிவடைவதால் 19.11.2021-இல் அனுப்பப்பட்ட பிரேரணை இசைவு பெற்று வருவதை எதிர்நோக்கி

தலைமை நீரேற்று நிலையம் மற்றும் பேருந்து நிலையம் மற்றும் கோர்ட் வளாக நீர் தேக்கத்தொட்டிகளின் பாதுகாப்பு கருதியும் காவலர் பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு மேற்படி பணிக்கு ஏற்கனவே ஒப்பந்தம் வழங்கப்பட்ட ஒப்பந்ததாரர் திரு. ஆர்.ரவிக்குமார் உசிலம்பட்டி என்பவர் மூலம் 16 பணியாளர்களை கொண்டு ஏற்கனவே வழங்கப்பட்ட ஊதிய அடிப்படையில் அக்டோபர் 2022 முதல் மார்ச் 2023 வரை உள்ள ஆறு மாதங்களுக்கு ஒப்பந்தத்தை நீட்டித்து உத்தரவு வழங்கவும் அதற்காகும் செலவினத்தொகை ரூ. 9,89,952/- மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1). இந்நகராட்சியின் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி மற்றும் தலைமை நீரேற்றும் நிலைய காவலர் பணியின் அவசியத்தை கருத்தில்கொண்டும், அதே சமயத்தில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 21787/2021/இஏ-2, நாள். 02.10.2021-இல் வெளிக்கொணர்வு முகமை மூலம் போதுமான பணியாட்களை ஒப்பந்த அடிப்படையில் அமர்த்துவது தொடர்பாக மதிப்பீடு பிரேரணை இசைவு பெற்று வருவதை எதிர்நோக்கி அக்டோபர் 2022 முதல் மார்ச் 2023 வரை உள்ள ஆறு மாதங்களுக்கு மட்டும் ஒப்பந்தத்தை புதுப்பித்து உத்தரவு வழங்கவும், அதனால் ஏற்படும் செலவினத்தொகை ரூ. 9,89,952/-ற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

2). குடிநீர் திட்ட பணி அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 2795/2021/இ1)

**தீர்மானம் எண்.145**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**மன்றப்பொருள்: 15**

உசிலம்பட்டி நகராட்சியில் காற்றோட்டமான பகுதியில் Lung Space அதிகரிக்கும் நடவடிக்கையாக தேக்கத் திடக்கழிவுகளை Bio-Mining முறையில் அகற்றி மீட்கப்பட்டுள்ள இடத்தில் நகர்ப்புற காடுகள் உருவாக்கிடும் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எ. | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்புநோக்கு பட்டியலின்படி |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சியில் | 0.78 | திரு. ஈஸ்வரன், | 0.12% |

| | | | | |
|---|---|---|---|---|
| | காற்றோட்டமான பகுதியில் Lung Space அதிகரிக்கும் நடவடிக்கையாக தேக்கத்திடக்கழிவுகளை Bio-Mining முறையில் அகற்றி மீட்கப்பட்டுள்ள நகர்ப்புற காடுகள் உருவாக்கிடும் பணி | | உசிலம்பட்டி | குறைவு |
| | | | திரு. கே.எம்.ராஜேஸ்கண்ணா உசிலம்பட்டி | 2.06% அதிகம் |

மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. ஈஸ்வரன் ஒப்பந்ததாரர் உசிலம்பட்டி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) நகர்மன்ற முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1912/2022/இ1)

**தீர்மானம் எண்.146**
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>மன்றப்பொருள்: 16</u>**

2022-23 ஆம் ஆண்டில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். ஆ1/3233/2022, நாள். 20.09.2022-இல் மேற்கொள்ளப்படவுள்ள கீழ்க்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எ. | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்புநோக்கு பட்டியலின்படி |
|---|---|---|---|---|
| 1 | 2022-23 ஆம் ஆண்டில் | 4.50 | திரு. ரவிக்குமார், | 0.12% குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். ஆ1/3233/2022, நாள். 20.09.2022-இல் மேற்கொள்ளப்படவுள்ள உசிலம்பட்டி நகர் பகுதி பிளாக் எண்.8, நகர நில அளவை எண் 109/2, ச.புறம்புகள் 0.50.78 ஏர்ஸ் பரப்பிற்கு கம்பி வேலி அமைத்து பாதுகாத்தல் பணி | | காண்ட்ராக்டர், உசிலம்பட்டி | |
| | | | திருமதி. பி.கார்த்திகா உசிலம்பட்டி | 2.16% அதிகம் |

மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. ரவிக்குமார் ஒப்பந்ததாரர் உசிலம்பட்டி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1999/2022/இ1)

**தீர்மானம் எண்.147**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**மன்றப்பொருள்: 17**

உசிலம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.22, பேரையூர் ரோடு பகுதியில் அமைந்துள்ள நவீன எரிவாயு தகன மேடையை எல்பிஜி பயன்படுத்தி எரியூட்டு பணி ஆக மாற்றியமைக்கும் பணியினை ரூ. 6.40/- இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு நிதி கோரும் பிரேரணை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1865/2022/இ1)

**தீர்மானம் எண்.148**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>மன்றப்பொருள்: 18</u>**

உசிலம்பட்டி நகராட்சியில் 2022-23-ஆம் ஆண்டில் வார்டு எண்.24, சர்வே எண். 162/5-இல் மணியக்கார ஊரணியை ரூ. 20.00/- இலட்சம் மதிப்பீட்டிலும், சர்வே வார்டு எண்.1, பிளாக் எண். 70, டி.எஸ்.எண்.2/5-இல் பொட்டு ஊரணியை ரூ.28.00/- இலட்சம் மதிப்பீட்டிலும் அபிவிருத்தி மற்றும் மேம்படுத்துதல் பணியினை மேற்கொள்ள நிதி கோரும் பிரேரணை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும்.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1864/2022/இ1)

**தீர்மானம் எண்.149**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>மன்றப்பொருள்: 19</u>**

இந்நகராட்சி எல்லைக்குப்பட்ட 24 வார்டுகளில் முதல் நிலை கழிவுகள் சேகரிக்கும் பணிகளுக்கு பயன்படுத்தப்படும் தள்ளுவண்டிகள் 15 எண்ணம் பழுது நீக்கம் செய்ய ஆகும் செலவினத்தொகைக்கு விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விபரம் கீழ்க்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை (1 தள்ளுவண்டிக்கு) |
|---|---|---|
| 1 | லட்சுமி அயர்ன் பாக்ஸ், உசிலம்பட்டி | ரூ. 5400 |
| 2 | பால்பாண்டி கிரில் ஒர்க்ஸ், உசிலம்பட்டி | ரூ. 4950 |
| 3 | வி.பி.எம். கிரில் ஒர்க்ஸ், உசிலம்பட்டி | ரூ. 5900 |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்த பால்பாண்டி கிரில் ஒர்க்ஸ், உசிலம்பட்டி நிறுவனத்தின் மூலம் தள்ளுவண்டிகளை பழுது நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 357/2021/எச்.1)

**தீர்மானம் எண்.150**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>மன்றப்பொருள்: 20</u>**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 24 வார்டுகளில் நெகிழி பயன்பாட்டை தடுக்கும் விதமாக தமிழக அரசின் சிறப்பு திட்டமான மீண்டும் மஞ்சப்பை திட்டம் தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் விழிப்புணர்வு வாசகம் அடங்கிய மல்டிகலர் ஸ்டிக்கர் 5000 எண்ணம் மற்றும் துண்டு பிரசுரங்கள் 10000 எண்ணம் அச்சிடவும் அதற்காகும் உத்தேச செலவினத்தொகை ரூ. 159000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

1).நெகிழி பயன்பாட்டடை தடுக்கும் விதமாகவும், பொதுச்சுகாதாரம் கருதியும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

2).பொதுச்சுகாதார அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முனு அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 13440/2019/எச்.1)

**தீர்மானம் எண்.151**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>மன்றப்பொருள்: 21</u>**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 24 வார்டுகளில் நெகிழி பயன்பாட்டை தடுக்கும் விதமாக தமிழக அரசின் சிறப்பு திட்டமான மீண்டும் மஞ்சப்பை திட்டம் தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் விழிப்புணர்வு வாசகம் அடங்கில் மல்டிகலர் ஸ்டிக்கர் 5000 எண்ணம் மற்றும் துண்டு பிரசுரங்கள் 10000

எண்ணம் அச்சிட விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விபரம் கீழ்க்கண்டவாறு

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | மஞ்சள் பையினை பயன்படுத்த தெரிவிக்கும் விழிப்புணர்வு ஸ்டிக்கர் | மஞ்சள் பையினை பயன்படுத்த தெரிவிக்கும் விழிப்புணர்வு துண்டு பிரசுரம் |
|---|---|---|---|
| 1 | Tirunelveli District Multipurpose service industrial co-operative ltd, Tirunelveli | ரூ. 16.00/- (1 **எண்ணம்**) (without taxes) | ரூ. 8.00/- (1 **எண்ணம்**) (without taxes) |
| 2 | Kovilpatti small scale industries service industrial co operative society ltd, Kovilpatti | ரூ. 15.50/- (1 **எண்ணம்**) (without taxes) | ரூ. 7.50/- (1 **எண்ணம்**) (without taxes) |
| 3 | The Thoothukud hi tech printing and allied service industrial co operative society ltd, Thoothukudi | ரூ. 15.00/- (1 **எண்ணம்**) (without taxes) | ரூ. 7.00/- (1 **எண்ணம்**) (without taxes) |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்த The Thoothukudi HI-Tech Printing and Allied Service Industiral Co-Operative Society Ltd., Thoothukudi நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று விநியோக உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

1).நெகிழி பயன்பாட்டை தடுக்கும் விதமாகவும், பொதுச்சுகாதாரம் கருதியும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

2). பொதுச்சுகாதார அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமைதி பெற்று விநியோக உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 13440/2019/எச்.1)

**தீர்மானம் எண்.152**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>மன்றப்பொருள்: 22</u>**

இந்நகராட்சிக்குச் சொந்தமான குத்தகை இனங்கள் பேருந்து நிலைய கடைகளின் கடை எண்கள். 36,72 மற்றும் 13 ஆகியவைகளை பொது ஏலத்தின் மூலம் வாடகைக்கு விடப்பட்ட நாள். 12.06.2018-இல் பொது ஏலம் நடத்துவதற்கு Bright Advertising மாலை முரசு தினசரி நாளிதழில் நாள். 29.05.2018-இல் விளம்பரம் செய்யப்பட்டது. இந்நிறுவனத்திற்கு விளம்பர செய்த தொகை ரூ. 13650/- வழங்க நகர்மன்றம் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1976/2022/அ1)

**தீர்மானம் எண்.153**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>மன்றப்பொருள்: 23</u>**

உசிலம்பட்டி நகராட்சிக்குச் சொந்தமான எஸ்.மேட்டுப்பட்டி தலைமை நீரேற்று நிலையத்தில் பழுதடைந்துள்ள 100 எச்.பி. மோட்டார் பழுது நீக்கம் செய்ய பணிக்கு மேற்படி பணிக்கு விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்புநோக்கு பட்டியலின்படி |
|---|---|---|---|---|
| 1 | உசிலம்பட்டி நகராட்சிக்குச் சொந்தமான எஸ்.மேட்டுப்பட்டி தலைமை நீரேற்று நிலையத்தல் பழுதடைந்துள்ள 100 எச்.பி. மோட்டார் பழுது நீக்கம் செய்த | 4.10 | M/s. ஸ்ரீராயல் எலக்ட்ரிக்கல்ஸ், ஸ்ரீவில்லிபுத்துர் | Est. rate |
| | | | M/s. ஸ்ரீ சண்முகா எலக்ட்ரிக்கல்ஸ் துத்துக்குடி | 31% அதிகம் |
| | | | M/s. பீமா எலக்ட்ரிக்கல்ஸ், அண்ட் லேத் | 1.57% அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | பணி | | ஒர்க்ஸ், இராஜபாளையம் | |

மேற்படி வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளில் மிகக்குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s. ஸ்ரீராயல் எலக்ட்ரிக்கல்ஸ், ஸ்ரீவில்லிபுத்துர் என்பவரின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1).மன்றம் அனுமதி வழங்கலாம்.

2). குடிநீர் பணி அவசர அவசியம் கருதிமுன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1723/2022/இ1)

**தீர்மானம் எண்.154**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**மன்றப்பொருள்: 24**

இந்நகராட்சிக்குச் சொந்தமான LCV வாகனம் TN 58 AS 3984-க்கு 3 டயர்கள் பழுதாகி உள்ளதால் புதிதாக 3 எண்ணம் டயர்கள் மற்றும் 3 எண்ணம் டியூப்கள் கொள்முதல் செய்யவும் அதற்காகும் உத்தேச செலவினத்தொகை ரூ. 10500/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1285/2020/எச்.1)

**தீர்மானம் எண்.155**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**மன்றப்பொருள்: 25**

இந்நகராட்சிக்குச் சொந்தமான பொதுச்சுகாதார பிரிவு LCV வாகன எண். TN 58 AW 3927-க்கு நான்கு டயர்களும் பழுதாகி வாகனத்தை இயக்க முடியாத சூழ்நிலை உள்ளதால் புதிதாக 4 எண்ணம் டயர்கள் மற்றம் 4 எண்ணம் டியூப்கள் கொள்முதல்

செய்யவும் அதற்காகும் உத்தேச செலவினத்தொகை ரூ. 14000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1257/2020/எச்.1)

**தீர்மானம் எண்.156**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>மன்றப்பொருள்: 26</u>**

இந்நகராட்சியில் 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 24 வார்டுகளில் மொத்த குடியிருப்புகளின் எண்ணிக்கை 10174, மக்கள் தொகை எண்ணிக்கை 35219, தெருக்களின் எண்ணிக்கை 207, வணிக நிறுவனங்கள் எண்ணிக்கை 1450, கல்வி நிறுவனங்கள் 12 அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள் 24, பேருந்து நிலையம்1, திருமண மண்டபங்கள் 20 எண்ணம் உள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 28369/ஜே3/2018, நாள். 22.11.2018-இல் உத்தரவில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.101, நாள். 30.04.1997-ஆம் தேதிய திருத்தியமைக்கப்படவேண்டிய அளவுகோலின்படி நகராட்சி பகுதியில் உள்ள குடியிருப்புகளுக்கு ஏற்றவாறு துப்புரவு பணியாளர்கள் தேவைப்படுவதால் ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ள துப்புரவு பணியாளர் பணியிடங்கள் போக மீதமுள்ள துப்புரவு பணியாளர் பணியிடங்களுக்கு அனுமதி கோரப்பட்டதில் இந்நகராட்சிக்கு மேற்கண்ட செயல்முறை உத்தரவுப்படி 25 துப்புரவு பணியாளர் பணியிடங்கள் ஒப்பந்த அடிப்படையில் ஒப்பந்த விதிமுறைகளுக்குட்பட்டு தனியார்மயமாக்கிக்கொள்ள அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட செயல்முறை உத்தரவின்படி 25 நபர்களைக்கொண்டுபழைய வார்டு எண்.11,12,13,14,15,16,17 மற்றும் 18 ஆகிய வார்டுகளில் ஒப்பந்த அடிப்படையில் 01.07.2019 முதல் 31.07.2022 வரை திரு. எம்.பத்மநாபன், ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

தற்போது நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.21787/2021/இஏ-2, நாள். 02.10.2021-இல் வெளிக்கொணர்வு முகமை மூலம் போதுமான பணியாட்களை ஒப்பந்த அடிப்படையில் அமர்த்துவது தொடர்பாக மதிப்பீடு தயார் செய்து 19.11.2021 மற்றும் 28.09.2022 ஆகிய தேதிகளில் பிரேரணை நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம் சென்னைக்கு அனுப்பப்பட்டுள்ளது. தற்போது திடக்கழிவு மேலாண்மை பணிகளை பெருகிவரும் குடியிருப்புகள் மற்றும்

மக்கள் தொகைக்கு ஏற்ப கழிவுகளை தரம் பிரித்து பெறவும், வடிகால் சுத்தம் செய்யவும், வாறுகால்களில் மண் அகற்றவும், சாலையோரங்களில் மண் அகற்றவும், சேகரிக்கப்பட்ட மக்கும் கழிவுகளை நுண் உர மையத்திற்கு எடுத்துச்செல்லவும், பொது கழிப்பிடங்களை பராமரிக்கவும் துய்மை பணியாளர்கள் தேவைப்படுவதால் பொதுச்சுகாதாரப்பணிகள் அவசர அவசியம் கருதியும் மேலும் ஏற்கனவே வழங்கப்பட்ட தனியார் மய ஒப்பந்தம் 31.10.2022 உடன் முடிவடைவதால் 19.11.2021 மற்றும் 28.09.2022 ஆகிய தேதிகளில் அனுப்பப்பட்ட பிரேரணை இசைவு பெற்று வருவதை எதிர்நோக்கியும், நவம்பர் 2022 முதல் ஜனவரி 2023 -க்குள் பிரேரணைக்கு நிர்வாக அனுமதி கிடைக்கப்பெற்றால் பழைய ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு பழைய ஒப்பந்ததாரருக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட ஊதிய அடிப்படையில் நவம்பர் 2022, டிசம்பர் 2022 மற்றும் ஜனவரி 2023 ஆகிய மூன்று மாதங்களுக்கு மட்டும் ஒப்பந்தத்தை புதுப்பித்து உத்தரவு வழங்கவும் அதற்காகும் உத்தேச செலவினத்தொகை ரூ. 12.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

இந்நகராட்சியின் பொது சுகாதாரத்தினை பேணிக்காக்க வேண்டியதன் அவசியத்தை கருத்தில் கொண்டும், அதே சமயத்தில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 21787/2021/இஏ-2, நாள். 02.10.2021-இல் வெளிக்கொணர்வு முகமை மூலம் போதுமான பணியாட்களை ஒப்பந்த அடிப்படையில் அமர்த்துவது தொடர்பாக மதிப்பீடு பிரேரணை இசைவு பெற்று வருவதை எதிர்நோக்கியும், பழைய ஒப்பந்ததாரருககு ஏற்கனவே வழங்கப்பட்ட ஊதிய அடிப்படையில் நவம்பர் 2022, டிசம்பர் 2022 மற்றும் ஜனவரி 2023 ஆகிய மூன்று மாதங்களுக்கு மட்டும் திரு. எம்.பத்மநாபன் ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்தத்தை புதுப்பித்து உத்தரவு வழங்கவும், அதனால் ஏற்படும் செலவினத்தொகையை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 930/2018/எச்.1)

**தீர்மானம் எண்.157**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>மன்றப்பொருள்: 27</u>**

இந்நகராட்சியில் 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 24 வார்டுகளில் மொத்த குடியிருப்புகளின் எண்ணிக்கை 10174, மக்கள் தொகை எண்ணிக்கை 35219, தெருக்களின் எண்ணிக்கை 207, வணிக நிறுவனங்கள் எண்ணிக்கை 1450, கல்வி

நிறுவனங்கள் 12 அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள் 24, பேருந்து நிலையம்1, திருமண மண்டபங்கள் 20 எண்ணம் உள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 28369/ஜே3/2018, நாள். 22.11.2018-இல் உத்தரவில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.101, நாள். 30.04.1997-ஆம் தேதிய திருத்தியமைக்கப்படவேண்டிய அளவுகோலின்படி நகராட்சி பகுதியில் உள்ள குடியிருப்புகளுக்கு ஏற்றவாறு துப்புரவு பணியாளர்கள் தேவைப்படுவதால் ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ள துப்புரவு பணியாளர் பணியிடங்கள் போக மீதமுள்ள துப்புரவு பணியாளர் பணியிடங்களுக்கு அனுமதி கோரப்பட்டதில் இந்நகராட்சிக்கு மேற்கண்ட செயல்முறை உத்தரவுப்படி 25 துப்புரவு பணியாளர் பணியிடங்கள் ஒப்பந்த அடிப்படையில் ஒப்பந்த விதிமுறைகளுக்குட்பட்டு தனியார்மயமாக்கிக்கொள்ள அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட செயல்முறை உத்தரவின்படி 25 நபர்களைக்கொண்டு பழைய வார்டு எண்.1,2,3,4,5,6,7,8 மற்றும் 9 ஆகிய வார்டுகளில் ஒப்பந்த அடிப்படையில் 01.01.2019 முதல் 31.12.2021 வரை திரு. கா.ஹரிஹரன், ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

தற்போது நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.21787/2021/இஏ-2, நாள். 02.10.2021-இல் வெளிக்கொணர்வு முகமை மூலம் போதுமான பணியாட்களை ஒப்பந்த அடிப்படையில் அமர்த்துவது தொடர்பாக மதிப்பீடு தயார் செய்து 19.11.2021 மற்றும் 28.09.2022 ஆகிய தேதிகளில் பிரேரணை நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம் சென்னைக்கு அனுப்பப்பட்டுள்ளது. தற்போது திடக்கழிவு மேலாண்மை பணிகளை பெருகிவரும் குடியிருப்புகள் மற்றும் மக்கள் தொகைக்கு ஏற்ப கழிவுகளை தரம் பிரித்து பெறவும், வடிகால் சுத்தம் செய்யவும், வாறுகால்களில் மண் அகற்றவும், சாலையோரங்களில் மண் அகற்றவும், சேகரிக்கப்பட்ட மக்கும் கழிவுகளை நுண் உர மையத்திற்கு எடுத்துச்செல்லவும், பொது கழிப்பிடங்களை பராமரிக்கவும் துய்மை பணியாளர்கள் தேவைப்படுவதால் பொதுச்சுகாதாரப்பணிகள் அவசர அவசியம் கருதியும் மேலும் ஏற்கனவே வழங்கப்பட்ட தனியார் மய ஒப்பந்தம் 31.10.2022 உடன் முடிவடைவதால் 19.11.2021 மற்றும் 28.09.2022 ஆகிய தேதிகளில் அனுப்பப்பட்ட பிரேரணை இசைவு பெற்று வருவதை எதிர்நோக்கியும், நவம்பர் 2022 முதல் ஜனவரி 2023-க்குள் பிரேரணைக்கு நிர்வாக அனுமதி கிடைக்கப்பெற்றால் பழைய ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு பழைய ஒப்பந்ததாரருக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட ஊதிய அடிப்படையில் நவம்பர் 2022, டிசம்பர் 2022 மற்றும் ஜனவரி 2023 ஆகிய மூன்று மாதங்களுக்கு மட்டும் ஒப்பந்தத்தை புதுப்பித்து உத்தரவு வழங்கவும் அதற்காகும் உத்தேச செலவினத்தொகை ரூ. 12.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

இந்நகராட்சியின் பொது சுகாதாரத்தினை பேணிக்காக்க வேண்டியதன் அவசியத்தை கருத்தில் கொண்டும், அதே சமயத்தில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 21787/2021/இஏ-2, நாள். 02.10.2021-இல் வெளிக்கொணர்வு முகமை மூலம் போதுமான பணியாட்களை ஒப்பந்த அடிப்படையில் அமர்த்துவது தொடர்பாக மதிப்பீடு பிரேரணை இசைவு பெற்று வருவதை எதிர்நோக்கியும், பழைய ஒப்பந்ததாரருகசு ஏற்கனவே வழங்கப்பட்ட ஊதிய அடிப்படையில் நவம்பர் 2022, டிசம்பர் 2022 மற்றும் ஜனவரி 2023 ஆகிய மூன்று மாதங்களுக்கு மட்டும் திரு. கா. ஹரிஹரன் ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்தத்தை புதுப்பித்து உத்தரவு வழங்கவும், அதனால் ஏற்படும் செலவினத்தொகையை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 930/2018/எச்.1)

**தீர்மானம் எண்.158**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>மன்றப்பொருள்: 28</u>**

இந்நகராட்சிக்குச் சொந்தமான பொதுச்சுகாதார பிரிவு வாகன எண். TN-58 AW 3247-க்கு (டிப்பர் லாரி) தகுதிச்சான்று புதுப்பிக்க வேண்டியுள்ளதால் சம்பந்தப்பட்ட வாகனத்திற்குரிய நிறுவனத்திற்கான அங்கீகாரம் பெற்ற நிறுவனமான (SML ISUZU) M/s. தீப்தி ஏஜென்சி, மதுரை நிறுவனம் மூலம் பழுது பணிகள் பார்க்கவும் அதற்காகும் உத்தேச செலவினத்தொகை ரூ. 60,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

1). மன்றம் அனுமதி வழங்கலாம்.

2). பொதுச்சுகாதார அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பழுது பணிகள் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 2217/2016/எச்.1)

**தீர்மானம் எண்.159**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>மன்றப்பொருள்: 29</u>**

இந்நகராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து 24.042015-இல் பணியிடை மரணமடைந்த திரு. எஸ்.பிச்சைப்பாண்டி என்பவரது தாயார் குடும்ப ஓய்வூதிய

பலன்கள் அனுமதிக்க பாதுகாவலர் சான்று கோரி முதலாவது மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மதுரையில் நகராட்சி ஆணையாளரை 2-ஆம் பிரதிவாதியாக சேர்த்து தொடரப்பட்ட வழக்கு எண். GWOP No. 76/2020-க்கு நகராட்சி சார்பில் ஆஜரானதற்கும், எதிர்வாதுரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததற்கு வழக்குக்கட்டணம் ரூ. 10000/- திரு. கே.எஸ்.ராஜன் வழக்கறிஞருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1463/2015/சி1)

**தீர்மானம் எண்.160**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**மன்றப்பொருள்: 30**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 24 வார்டுகளில் 21 எண்ணம் கொசு ஒழிப்பு பணியாளர்களை கொண்டு M/Sதேவதர்ஷினி மேன்பவர் ஏஜென்சி நிறுவனம் மூலம் டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கோள்ளப்பட்டு வருகிறது. மேற்படி ஒப்பந்தகாலம் 31.10.2022 உடன் முடிவடைவதால் தற்போது பருவ மழை காலமாக உள்ளதாலும் அதிக அளவில் டெங்கு கொசு உற்பத்தியாவதை தடுக்கும் விதமாகமாகவும், பொது சுகாதார அவசர அவசியத்தை கருத்தில் கொண்டும் டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் ஏற்கனவே வழங்கப்பட்ட ஊதியத்தின் அடிப்படையில் M/Sதேவதர்ஷினி மேன்பவர் ஏஜென்சி நிறுவனம் மூலம் மேலும் மூன்று மாதங்களுக்கு (நவம்பர் 2022 முதல் ஜனவரி 2023 வரை ) மேற்கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினத் தொகை ரூ.695000/- பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 91/2015/எச்1)

**தீர்மானம் எண்.161**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

ஆணையாளர்
உசிலம்பட்டி நகராட்சி